

திராவிட மாடல் ஆட்சி நாயகன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசின் சாதனை திட்டங்கள் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் மாபெரும் வெற்றியைத் தரும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு ஊரக வளர்ச்சித்துறை மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களும் சாலை வசதி, குடிதண்ணீர், தெருவிளக்கு வசதி நூறு சதவிகிதம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கூறினார். அருகில் வேடசந்தூர் எம்.எல்.ஏ. காந்திராஜன் உட்பட பலர் உள்ளனர்.

## தி.மு.க. அரசின் சாதனை திட்டங்களால்

# விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் மாபெரும் வெற்றி பெறுவார்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், ஜூன் 20 -

திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு..க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசின் சாதனை திட்டங்கள் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் மாபெரும் வெற்றியைத் தரும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு ஊரக வளர்ச்சித்துறை மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களும் சாலை வசதி, குடிதண்ணீர், தெருவிளக்கு வசதி நூறு சதவிகிதம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமியை அவரது இல்லத்தில் ஆத்தூர் தொகுதியில் உள்ள கிராம ஊராட்சியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து தங்களின் பிள்ளைகள் உயர்கல்வி கற்பதற்கான கோரிக்கை மனு மற்றும் கிராமங்களுக்கு தேவையான நலத்திட்ட உதவிகள் குறித்த கோரிக்கை மனுக்களை கொடுத்து தீர்வு பெற்றனர். அதன்பின்னர் திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்து விக்கிரவாண்டி இடைத்தேர்தலுக்காக திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து களப்பணி ஆற்றும் திமுக நிர்வாகிகள் மற்றும் அவர்கள் பணியாற்றக்கூடிய பகுதிகள் குறித்து கேட்டறிந்ததோடு வரலாறு காணாத வெற்றியை பெறும் அளவிற்கு ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் தேர்தல் பிரச்சார பணியில் ஈடுபட வேண்டும் எனக் கூறினார்.

அப்போது அமைச்சர் ஐ.பெரியசாமி கூறுகையில், சொல்லி அடித்ததுபோல் தமிழகத்தில் 40க்கு 40 நாடாளுமன்ற தொகுதியில் மாபெரும் வெற்றியை பெற்றுத் தந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொற்கால ஆட்சியில் அனைத்து கிராமங்களும் தன்னிறைவு பெற்று வருகின்றன. குறிப்பாக ஊரக வளர்ச்சித்துறை மூலம் அனைத்து கிராமங்களும் சாலை வசதி, குடிதண்ணீர், தெருவிளக்கு வசதி நூறு சதவிகிதம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக ஒன்றை சொல்ல வேண்டும் என்றால் தமிழக முதல்வரின் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் அமைக்கப்பட்ட தார்ச்சாலைகள் மூலம் லட்சக்கணக்கான விவசாயிகள் பயன்பெற்று தங்கள் விளை பொருட்களை அருகில் உள்ள நகரங்களுக்கு சிரமமின்றி எடுத்துச் சென்று பயன்பெற்று வருகின்றனர். விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தமிழகம் முதல்வரின் சாதனை திட்டங்களையும், மாணவர்கள் மற்றும் ஆதரவற்றோர் மற்றும் பெண்களின் நலனுக்காக அவர்கள் செயல்படுத்திய திட்டங்களை வீடு தோறும் சென்று எடுத்துரைத்தாலே எளிதாக மாபெரும் வெற்றி பெறலாம் என்றார்.

நிகழ்ச்சியின்போது வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினர் காந்திராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர் ஆ.நாகராஜன், பிலால் உசேன், பொருளாளர் கு. சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், ஆத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ப. ராஜேஷ் பெருமாள், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல. கண்ணன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், குட்டத்து ஆவாரம் பட்டி டென்னி, நெல்லூர் மலைச்சாமி, அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் மணி (எ) நந்தகோபால், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ப.குமரப்பன், துணை அமைப்பாளர் எல்.கணேஷ் பிரபு, மாவட்ட விவசாய அணி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி ஜே.அருண், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஷ், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் நெல்லைசுபாஷ், ஆனந்த், மாவட்ட பிரதிநிதி ரவிதண்டபாணி, திண்டுக்கல் நகர தி.மு.க. நிர்வாகிகள் நந்திநடராஜன், நரசிங்கம், 7வது வார்டு வீரபாண்டி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் இன்று (20.06.2024 - வியாழக்கிழமை) மாலை 3.00 மணி அளவில், விழுப்புரம் "கலைஞர் அறிவாலயத்தில்" விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** 1. முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா,
2. கழக ஆக்கப் பணிகள் - குறித்து

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 600 018
நாள்- 19.06.2024

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மீஞ்சூர் மு. கேசவன்
## ஜூன் 20 (2019)



கழகம் துவங்கிய காலத்திலேயே, கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பொன்னேரி வட்டத்தில் கழகத்தை துவங்கியவர்.

பொன்னேரி வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற மும்முனைப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## பூவிருந்தவல்லியில் ஆ.கிருஷ்ணசாமி பொதுமக்களிடம் கோரிக்கை மனு பெற்றார்!

திருவள்ளூர், ஜூன் 20 –

திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்துகொண்டு பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியத்தில் உள்ள பல்வேறு கிராமங்களை சேர்ந்தவர்களிடமிருந்து குறைகளைக் கேட்டறிந்தார்.

மனுக்களை பெற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் வழங்கி உடனடியாக பட்டா ரேஷன் கார்டு முதியோர் தொகை பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உடன் வருவாய் கோட்டாட்சியர் கற்பகம், திருவள்ளூர் வட்டாட்சியர் வாசுதேவன், திருவள்ளூர் தி.மு.க. ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், ஒன்றிய குழு துணைத் தலைவர் பர்கத்துல்லா கான், பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ், நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், டி.கே.சீனிவாசன், த.சுகுமார், முரளி கிருஷ்ணன், கே.சரவணன், அயலூர் வெங்கடேசன் உள்பட பலர் உள்ளனர்.

## முத்தமிழறிஞர் கலைஞரின் 'இராமானுஜர்' தொலைக்காட்சித் தொடர் நூலாக்கம்!

# சமயங்களும், சமயநெறிகளும் மானுடத்தை மேம்படுத்த வழிகாட்டட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

சென்னை, ஜூன் 20 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய "இராமானுஜர் - மதத்தில் புரட்சி செய்த மகான்" எனும் தொலைக்காட்சித் தொடர் நூலாக்கம் செய்யப்பட்டு இந்து சமய அறநிலைத் துறை சார்பில் நூலாக வெளியிடப்பட்டது.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவில், "சமயங்களும், சமய நெறிகளும் மானுடத்தை மேம்படுத்த வழிகாட்டட்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**அடித்தட்டு மக்களுக்கு மாண்புப் பெயர்கள் சூட்டிச் சுயமரியாதையைக் காத்த இராமானுஜரின் காவியத்தை "மதத்தில் புரட்சி செய்த மகான்" எனத் தனது நிறைவுக்கால படைப்பாக வழங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர்.**

**சாதியால் ஒடுக்கப்பட்ட மக்களை அரவணைத்துக் கோயில் நுழைவு செய்து கோயிலினுள் தமிழ் மந்திரங்களை ஓங்கி ஒலிக்கச் செய்த இராமானுஜரின் வாழ்வுதன்னை, முத்தமிழறிஞர் கலைஞரின் எழுத்துகளில் உங்கள் கைகளுக்குப் புத்தகமாக வழங்குகிறோம்.**

**சமயங்களும் சமய நெறிகளும் மானுடத்தை மேம்படுத்த, ஒற்றுமையை வளர்க்க, ஏற்றத்தாழ்வுகளை நீக்க வழிகாட்டட்டும்! பொலிக! பொலிக!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!



மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**20.6.2024 - ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி மாதனூர் கிழக்கு ஒன்றியம்**

| நேரம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|
| காலை 8.20 மணி | திருமலைகுப்பம் |
| காலை 8.40 மணி | பாலூர் |
| காலை 9.00 மணி | மாதனூர் |
| காலை 9.20 மணி | தோட்டாளம் |
| காலை 9.40 மணி | குளிதிகை ஜமீன் |
| காலை 10.00 மணி | வெங்கிரி |
| காலை 10.20 மணி | கீழ்முருங்கை |
| காலை 10.40 மணி | வடபுதுப்பட்டு |
| காலை 11.00 மணி | சோலூர் |
| காலை 11.20 மணி | பெரியாங்குப்பம் |
| காலை 11.40 மணி | நாச்சார் குப்பம் |
| பகல் 12.00 மணி | கென்னடி குப்பம் |
| பகல் 12.20 மணி | ஆலங்குப்பம் |
| பகல் 12.40 மணி | விண்ணமங்கலம் |
| பகல் 1.00 மணி | மின்னூர் |
| பகல் 1.20 மணி | செங்கிலிகுப்பம் |
| பகல் 1.30 மணி | மாராப்பட்டு |
| பகல் 2.00 மணி | நாய்க்கனேரி |

**20.6.2024 -ஆம்பூர் சட்டமன்ற தொகுதி ஆம்பூர் நகரம்**

| நேரம் | இடம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| மாலை 4.00 மணி | மளிகை தோப்பு | வார்டு 1, 2, 15, 16 |
| மாலை 5.00 மணி | கஸ்பா -எ மந்தகரை | வார்டு 4, 5, 6 |
| மாலை 5.30 மணி | கஸ்பா - B காதர்பேட்டை | வார்டு 12, 13,22 |
| மாலை 6.00 மணி | V.A. கரீம் ரோடு | வார்டு 20,23, 24 |
| மாலை 6.30 மணி | எல்லையம்மன் கோயில் கிருஷ்ணாபுரம் | வார்டு 17, 18, 19 |
| மாலை7.00 மணி | விநாயகர் கோயில் அருகில் பை-பாஸ் சாலை | வார்டு 35, 36 |
| மாலை 7.30 மணி | SK ரோடு சாணாங்குப்பம் | வார்டு 32, 33, 34, 27 |
| மாலை 8.00 மணி | ரெட்டி தோப்பு | வார்டு 28, 29, 30, 31 |
| மாலை 8.30 மணி | புதுமனை | வார்டு 8, 9 |

**21.6.2024 -ஆம்பூர் சட்டமன்ற தொகுதி மாதனூர் மேற்கு ஒன்றியம்**

| நேரம் | இடம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| காலை 8.30 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | மேல்குப்பம் |
| காலை 8.45 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | பாப்பனப்பள்ளி |
| காலை 9.00 மணி | அரசமரம் நூலகம் எதிரில் | வடச்சேரி |
| காலை 9.15 மணி | பழைய தி.மு.க. அலுவலகம் எதிரில் | சின்ன பள்ளி குப்பம் |
| காலை 9.45 மணி | RI கோட்ரஸ் எதிரில் | எம்.எஸ்.குப்பம் |
| காலை 10.00 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | வடகரை |
| காலை 10.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | வீராங்குப்பம் |
| காலை 10.30 மணி | பஸ் நிலையம் எதிரில் | தென்னம்பட்டு |
| காலை 11.00 மணி | பஸ் நிலையம் எதிரில் | மலையாம்பட்டு |
| காலை 11.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | அரங்கல்துருகம் |
| காலை 11.30 மணி | பஸ் நிலையம் எதிரில் | கதவாளம் |
| காலை 11.45 மணி | ராமர் கோயில் அருகில் | பார்சனாப்பள்ளி |
| காலை 12.00 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | மோதகப்பள்ளி |
| பகல் 12.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | குமாரமங்கலம் |
| பகல் 12.30 மணி | பஸ் நிலையம் எதிரில் | கம்மகிருஷ்ணபள்ளி |
| பகல் 12.45 மணி | பஸ் நிலையம் எதிரில் | கரும்பூர் |
| பகல் 1.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | வெங்கடசமுத்திரம் |
| பகல் 1.45 மணி | கூட்ரோடு பஸ் நிலையம் | மிட்டாளம் |

**21.6.2024 - குடியாத்தம் சட்டமன்ற தொகுதி மாதனூர் மத்திய ஒன்றியம்**

| | | |
|---|---|---|
| மாலை 4.00 மணி | தேவலாபுரம் | பஸ் நிலையம் |
| மாலை 4.20 மணி | துத்திப்பட்டு | பஸ் நிலையம் |
| மாலை 4.40 மணி | பெரியவரிகம் | பஸ் நிலையம் |
| மாலை 5.00 மணி | சின்னவரிகம் | பஸ் நிலையம் |
| மாலை 5.20 மணி | கைலாசகிரி | பஸ் நிலையம் |
| மாலை 5.40 மணி | நரியம்பட்டு | ஊர் மத்தியில் |
| மாலை 5.55 மணி | அயித்தம்பட்டு | கோயில் எதிரில் |
| மாலை 6.00 மணி | சாத்தம்பாக்கம் | ஊர் மத்தியில் |
| மாலை 6.20 மணி | பெரிய கொம்மேஸ்வரம் | ஊர் மத்தியில் |
| மாலை 6.40 மணி | சோமலாபுரம் ஊராட்சி | ஊர் மத்தியில் |